# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்:50

**I அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8x1=8

1. மரம் வளர்த்தால் ........ பெறலாம்.
   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி
2. திருநெல்வேலி ........ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
   அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி
3. காந்தியடிகள் எப்போதும் ........ப் பேசினார்.
   அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை
4. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் ............
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

**ஆ) பொருத்துக**

5. நாற்று – பறித்தல்
6. நீர் – அறுத்தல்
7. கதிர் – நடுதல்
8. களை – பாய்ச்சுதல்

**II எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு சொற்களில் விடையளி** 5x2=10

9. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
10. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர் ?
11. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை ?
12. உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.
13. பொய்கையாழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார் ?
14. நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது ?
15. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது ?

**III எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி** 3x4=12

16. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
17. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
18. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
19. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை ?
20. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது ?

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



IV அடிமாறாமல் எழுதுக 4+2=6

21. மாரியொன்று ........ எனத் தொடங்கும் 'விருந்தோம்பல்' பாடலை எழுதுக.
22. 'நாடு' என முடியும் திருக்குறளை எழுதுக.

V பின்வரும் அனைத்து வினாக்களுக்கு விடையளி. 8x1=8

23. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.
சிறுவயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள் ........ என் மனத்தில் பதிந்தன.
(கிணற்றுத் தவளை போல / பசுமரத்தாணி போல)
24. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.
பிடிக்கிறாங்க
25. கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.
திருநெல்வேலி
26. தொடர்களில் அமைத்து எழுதுக.
சிந்தித்து
27. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.
நெல்லையப்பர் கோவில் ............ உள்ளது ?
28. பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக.
விதை
29. மடமகள் – என்பதன் பொருள் எழுதுக.
30. இளமை எதிர்ச்சொல் எழுதுக.

VI ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1x6=6

31. 'என்னைக் கவர்ந்த நூல்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
32. 'ஒற்றுமையே உயர்வு' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com